## மகா சாந்தம் வழங்கும்

# ஆத்மஞானி தேனி ஸ்வாமிகள்

## வரலாற்று சுருக்கமும், உபதேசமும்

உலகத்தில் தர்மத்தை நிலைநாட்டவும், ஆன்மிக மறுமலர்ச்சி உண்டாக்கவும் அவ்வப்போது ஆத்ம ஞானிகள் தோன்றி நாட்டு மக்களை நன்நெறிப்படுத்தி ஆன்மிகத்தில் திளைக்கச் செய்து பிறவா நிலையாகிய ஆத்மஞானம் அடைய வழி காட்டுகிறார்கள்.

அந்த வகையில் பரத நாட்டில் தான் என்னற்ற ஆத்ம ஞானிகளும், ரிஷிகளும், முனிவர்களும், தவசிரேஷ்டர்களும் தோன்றி நாட்டை ஆன்மிகத்தில் திளைக்கச் செய்துள்ளார்கள்.

தமிழகத்தின் வளமான பகுதிகளில் ஒன்றான தேனி மாவட்டம், ஆண்டிப்பட்டி வட்டம், மரிக்குண்டு மதுரா M.சுப்புலாபுரம் கிராமத்தில் ஸ்ரீ சற்குரு ஸ்வாமிகள் என்ற மகான் ஒருவர் சிலகாலம் தங்கி நிர்விகற்ப சமாதியில் இருந்துள்ளார்கள்.

ஸ்ரீ சற்குரு ஸ்வாமிகளுக்கு அந்த ஊரில் வாழ்ந்துவந்த கொண்டுசாமி நாயக்கர், கிச்சம்மாள் தம்பதியினர் தொண்டு செய்து வந்தனர்.

மகாஞானி ஸ்ரீ சற்குரு ஸ்வாமிகள் ஒருநாள் தன் சீடர்களை அழைத்து நான் ஜீவசமாதியில் அமரப்போகிறேன் என்றும் அதற்காக பூமியில் ஒரு குழி எடுக்க வேண்டும் என்றும் சொன்னார். அதன்படி சுப்புலாபுரம் சீடர்கள் பூமியில் குழி தோண்டியதும் அந்த குழியில் ஸ்ரீ சற்குரு ஸ்வாமிகள் நிர்விகற்ப சமாதியில் உட்கார்ந்துவிட்டார். பிறகு மண்ணைத் தள்ளி மூடி விட்டனர். ஸ்ரீ சற்குரு ஸ்வாமிகள் நிர்விகற்ப சமாதியில் ஆழ்ந்தார்.

13 நாட்கள் கழித்து அந்த குழியை தோண்டி சற்குரு ஸ்வாமிகளை வெளியே எடுத்து, ஸ்ரீ சற்குரு ஸ்வாமிகள் குறிப்பிட்டது போல் 4 அதிர்வேட்டுகள் விட்டும், 100 குடம் தண்ணீர்

அவர் தலையில் ஊற்றியும், தண்டோராவும் அடித்தனர். சற்குரு ஸ்வாமிகள் மெல்ல விழித்து நிர்விகற்ப சமாதியிலிருந்து உடல் உணர்வு பெற்றார்.

இது நடந்தது 1910ல், அந்தக் காலத்தில் உள்ளவர்கள் ஸ்ரீ சற்குரு ஸ்வாமிகளின் ஞானத்தை விரிவாக பேசுவார்கள். ஸ்ரீ சற்குரு ஸ்வாமிகளுக்கு என்னற்ற சீடர்கள் இருந்தார்கள்.

இப்படிபட்ட ஸ்ரீ சற்குரு ஸ்வாமிகளுக்கு சேவை செய்ததன் பலனாக கொண்டுசாமி, கிச்சம்மாள் தம்பதியருக்கு ஸ்ரீ சற்குரு ஸ்வாமிகளின் அருளாசியினால் தமிழ் பிரஜோபதி வருஷம் ஆவணி 12-ம் தேதி வெள்ளிக்கிழமை விடியற்காலை 4-30 மணிக்கு (28-8-1931)ல் முன்ஜென்மங்களிலேயே ஆத்ம சாதனைகளை முடித்த ஓர் ஞானி குழந்தையாக பிறந்தது.

அந்த குழந்தைக்கு ராஜு என்று செல்லப் பெயர் சூட்டி மகிழ்ந்தனர் பெற்றோர். குழந்தையை மிகவும் அன்புடன் வளர்த்து வந்தார்கள்.

கொண்டுசாமி குடும்பம் விவசாய குடும்பம். தன்பிள்ளை ராஜுவை 7-வது வயதில் பள்ளியில் சேர்த்தனர். 5-ம் வகுப்பு வரை படிக்க வைத்தனர். பின்னர் விவசாய வேலைக்கு தனக்கு உதவியாக தன் மகன் ராஜு இருக்க வேண்டும் என்ற நிலை ஏற்பட்டதால் படிப்பை 5-ம் வகுப்புடன் நிறுத்தி விட்டனர்.

ராஜு தந்தைக்கு உதவியாக விவசாய வேலைகள் செய்துவந்தார். ஸ்ரீ சற்குரு ஸ்வாமிகளின் சீடரான குப்பையா ஸ்வாமிகள் என்ற ஒரு மகான் ஞான அனுபவம் பெற்றவர். அவர் அவ்வப்போது ராஜு வீட்டில் வந்து தங்குவார். அவரிடம் ஞான பாடம் கேட்க பலர் வந்து செல்வார்கள். ராஜு விவசாய வேலை நேரம் போக ஓய்வு நேரத்தில் குப்பையா ஸ்வாமிகளின் முன்னிலையில் அமர்வார். குப்பையா ஸ்வாமிகள் ராஜுவை சங்கர பாஷ்யம் என்னும் பகவத் கீதையை படிக்கச் சொல்லி உடன் உள்ள சீடர்களுக்கு விளக்கவுரை சொல்வார். அந்த விளக்க உரை ராஜுக்கு ஞான உணர்வு உண்டாக்கியது.

மேலும், ஸ்ரீரங்க மகத்துவம் என்னும் நூலைக் கொடுத்துப் படிக்கச் சொன்னார். அதில் ஒரு சுலோகம் "எண்ணூறு யுக கோடி காலம் தவம் இருந்தாலும் கண்ணனை காண்பது அரிது. அரிதேயாகும் உள்நாடி சற்றே நோக்கிடில் கண்ணனை கண்ணில் கண்டு உய்திடல் ஆகும்" இந்த சுலோகத்தின் உட்பொருள் ராஜு மனதில் ஆழமாகப் பதிந்தது.

முன் ஜென்மங்களில் ஞான சாதனைகளை முடித்திருந்த படியால் இந்த சுலோகத்தைப் படித்ததும் உள்முக நாட்டம் பயில வேண்டும் என்ற தீவிர வேட்கை ராஜுக்கு உண்டாயிற்று. ஆகையால் 20-வது வயதில் ஒருநாள் அவரது அறைக்கதவை தாளிட்டு உள்ளே தனிமையில் அமர்ந்து உள்முக நாட்டம் பயின்றார்.

முன்ஜன்ம பயனால் உள்முக நாட்டம் பயின்ற சில கணங்களில் நாட்டம் உடலையும் கடந்து மனதையும் கடந்து உடல் மனமற்ற சுத்த உணர்வு நிலையை, ஆன்ம நிலையை அடைந்தது. உள்ளே உண்மையைத் தேடிய நான் மறைந்து போனது. இரண்டற்ற ஆன்ம நிலையை உணர்ந்தார். இந்த அனுபவம் அவரது வாழ்வை அடியோடு மாற்றியது. இந்த சமாதி நிலையிலேயே சில மணி நேரங்கள் இருந்தார். பிறகு வெளிப்பட்டு வந்தார்.

சமாதி நிலை அனுபவம் பெற்ற பிறகு அதே நிலையை திரும்பத் திரும்ப அடிக்கடி பழகி காலக்கிரமத்தில் சகஜசமாதிநிலை அனுபவம் பெற்றார். வெளியே எப்போதும் போல் விவசாய வேலைகளும், குடும்ப வேலைகளும் சாதாரண மற்ற மனிதர்களைப் போல் செய்து கொண்டு உள்ளே ஆன்ம அனுபவத்துடன் வாழலானார்.

சுப்புலாபுரத்தில் ஸ்ரீ சற்குரு ஸ்வாமிகள் ஸ்ரீ குருபூஜை ஆண்டு தோறும் சிறப்பாக நடைபெறும். அந்த ஸ்ரீ குரு பூஜைக்கு பல சாதுக்கள் வருவார்கள். அவர்களுடன் ராஜு அடிக்கடி சத் விஷயங்களை அனுபவத்திலிருந்து பேசி விவாதிப்பார்.

ஸ்ரீ சற்குரு ஸ்வாமிகளின் சிஷ்யரான குப்பையா ஸ்வாமிகள் ஒருமுறை தனது சிஷ்யர் ராஜியைப் பார்த்து "மகனே நீ இருக்கச் சொன்னால் உன்னோடு எவ்வளவு காலமும் இருப்பேன் நீ என்ன சொல்கிறாய்?" என்றார்.

அதற்கு ராஜி "உன்னைப் படைத்தவன் நான் அல்ல. படைத்தவன் எது செய்வானோ அது நடக்கும்" என்றார். அதற்கு குப்பையா ஸ்வாமிகள், "இப்போது எனக்கு தெளிவு வந்துவிட்டது. இன்னும் இரண்டு வருடம் உன் தொண்டில் வாழ்வேன். அதன்பின் சமாதி அடைவேன்" என்றார்.

அதன்படி இரண்டு வருடம் அவரோடு வாழ்ந்து அதன்பிறகு பத்மாசனத்தில் அமர்ந்து மூச்சை அடக்கி சமாதி அடைந்துவிட்டார். அவருக்கும் அனேக பக்தர்கள் இருந்தார்கள். அவரை பத்மாசனத்தில் இருந்தபடியே சமாதி வைத்தனர். அவரது சமாதியால் எந்தவித மனபாதிப்பும் ராஜிக்கு எழவில்லை.

ஆன்ம தரிசனமே அகில உலகத்தையும் படைத்தவனின் தரிசனம். ஸ்ரீ ரமண பகவான் சொன்னதும் "நான் யார்? என்னும் தேடலே. நானே நானை தெரிந்து இருப்பது தேடலற்ற தேடல்" இது ஓஷோவாக்கு.

தன் உண்மை சொரூபத்தை உணர்வதே கடவுளை உணர்வதாகும். இது பல ஞானிகளின் வாக்கு. இந்த வகையில் ஞான அனுபவம் கைவரப் பெற்ற ராஜிக்கு பெற்றோர் திருமணம் செய்து வைக்க முற்படுகின்றனர். இவரோ திருமணம் வேண்டாம் என்று மறுக்கிறார். பெற்றோரின் வற்புறுத்தலுக்கிணங்க 29-வது வயதில் திருமணம் செய்து கொண்டார்.

இவருக்கு பிறந்த இரண்டு குழந்தைகளும் இறந்துவிட்டது. மனம் வருந்திய மனைவி மற்றும் உறவினர்கள் வம்ச விருத்திக்காக குழந்தை வேண்டுமே என்று மீண்டும் ராஜியை வற்புறுத்தி முதல் மனைவியே தனது தங்கையை இரண்டாம் திருமணம் செய்வித்தார். இரண்டாவது மனைவிக்கும் ஒரு ஆண் குழந்தையும் இரண்டு பெண் குழந்தைகளும் பிறந்தனர்.

இவர் இல்லறத்தில் இருந்தாலும் மனமற்ற நிலையிலேயே மோன நிலையிலே இருந்தார். விவசாய வேலைகள் இடையிடையே நிலத்தில் உட்கார்ந்து உள்நோக்கிச் சென்று நான் அற்ற இருப்பு உணர்வு நிலைக்குச் செல்வார். மீண்டும் விவசாய வேலைகள் செய்வார்.

ஞானமடைவதற்கு துறவு தான் ஏற்றது என்பது அல்ல. நமது நாட்டில் எண்ணற்ற ஞானிகள், ரிஷிகள், முனிவர்கள், ஆழ்வார்கள், நாயன்மார்கள் இல்லறத்தில் இருந்து கொண்டே ஞானநிலை அடைந்துள்ளார்கள். மனதைத் துறப்பதே உண்மை துறவு.

ஞானமடைய இல்லறம் ஒரு தடையே அல்ல என்பதை பண்டைய ஞானிகளின் வாழ்க்கை மட்டும் முன்னுதாரணம் அல்ல. இந்த காலத்தில் இல்லறத்தில் இருந்துகொண்டே எண்ணற்ற ஞானிகள் வாழ்கிறார்கள். அந்த வரிசையில் இவரும் ஒருவராக விளங்குகிறார்.

இவருடன் எல்லா ஞானிகளும் பேசுகிறார்கள். கடவுளர்களும் இவருடன் பேசுகிறார்கள். அதற்கு அவர் கூறும் கருத்து, "எல்லோரும் தன் உண்மை சொரூபத்தை அறிந்து இருந்தால் எல்லா ஞானிகளும் எல்லா தெய்வங்களும் பேசுவார்கள்" என்றார்.

இவர் தனக்கு ஞான அனுபவம் ஏற்பட்டதால் மொட்டை அடித்தல், தாடி வளர்த்தல் என்று புறவேஷம் பூணாமல் உள்ளபடியே சாதாரண மனிதரைப் போலவே வாழ்ந்து வருகிறார்.

இவரின் ஆன்மீக அனுபவங்கள் ஏராளம்! ஏராளம்!! அவற்றைப் பிறகு இவரது வாழ்வின் விரிவான சரித்திரம் ஒன்று எழுதி வெளியிடுகிறோம். இப்போது சுருக்கமான வரலாற்றை மட்டும் எழுதுகிறோம்.

ஒருமுறை ராஜு ஸ்வாமிகள் காவேரி கரைக்குச் சென்று சூர்ய உதயத்தில் மேற்கு பகுதியில் யாரும் இல்லாத இடத்தில் இறங்கி குளித்துக் கொண்டிருக்கும் போது அவரது பக்கமாக 2 நபர்கள்

வந்து சூர்யனைப் பார்த்து மந்திரம் சொல்லி தண்ணீர் தெளித்தார்கள்.

"ஏ... சாமிகளே அண்டச் சூரியனைப் பார்த்து தண்ணீர் தெளித்து என்ன பிரயோஜனம், பிண்டச் சூரியனைப் பார்த்து தண்ணீர் தெளியுங்கள்" என்றார். அவர்கள் இவர் கையைப் பிடித்து கொண்டு சாமி நாங்கள் திருச்செந்தூரிலிருந்து 15 தினங்களுக்கு முன்பு புறப்பட்டு ஊர் ஊராகச் சென்று மெய்யான குருநாதரை தேடிக் கொண்டு வருகிறோம். பல மடாதிபதிகள், துறவிகளை சந்தித்து அவர்களிடம் உபதேசம் வேண்டினோம். அவர்களோ பொய், கொலை, களவு, விபச்சாரம் செய்யாதே என்றும், சிலபேர் பக்தி செய் என்றும் சிலர் மந்திரங்களை கூறியும் அனுப்பினார்கள். ஆனால் ஞான விளக்கம் யாரும் சொல்லவில்லை.

ஆனால் நீங்களோ, அண்டச் சூரியன், பிண்டச் சூரியன் என்கிறீர்கள். அதன் விளக்கம் என்ன என்று கேட்டார்கள். அதற்கு உன் உள்உணர்வே பிண்டச் சூரியன் என்றும், உனது உள் உணர்வை உணர்வதே உண்மை ஞானம் என்றும் அதுவே மாறாத சாந்தி அளிக்கும் என்றும், வெளி சூரியனை மட்டும் வணங்குவதால் உண்மை ஞானம் பெற முடியாது என்றும் ஞான விளக்கங்களை சொன்னார். ராஜு ஸ்வாமிகளின் ஞான விளக்கம் கேட்ட திருச்செந்தூர் பக்தர்கள் மிகவும் தெளிவு பெற்றார்கள்.

காலை 10 மணி ஆகிவிட்டது. அனைவரும் கோவிலுக்குச் சென்று ஸ்ரீ ரங்கநாதனை தரிசனம் செய்துவிட்டு அவரவர் ஊருக்கு புறப்பட்டனர்.

திருச்செந்தூர் சென்ற அன்பர்கள் வாரா வாரம் பல ஆன்மீக கேள்விகளை தபால் மூலம் எழுதி கேட்டனர். அவரும் அவ்வப்போது பதில் எழுதி அனுப்புவார்.

இவ்விதமாக ராஜு ஸ்வாமிகளின் ஞான அனுபவத்தை உணரவே அவருக்கு சில சிஷ்யர்கள் உருவானார்கள். இவர் தேனி

பகுதியைச் சேர்ந்தவராதலால் ராஜி ஸ்வாமியை தேனி ஸ்வாமிகள் என்றே குறிப்பிடலானார்கள். நாமும் இனி அவரை தேனி ஸ்வாமிகள் என்றே அழைப்போம்.

ஒருமுறை தேனி ஸ்வாமிகள் திருச்செந்தூர் சென்றார். நேரம் இரவு 12 மணி. அப்போது திருச்செந்தூர் கோவில் முருகனுடைய கையிலிருந்து மின்னலைப் போல ஜோதி கிளம்பி தேனி ஸ்வாமிகளின் நாக்கின் வழியாக உள்ளே சென்றது. அப்போது அவருக்கு உடலும், உள்ளமும் ஜோதி மயமாக இருப்பதாக உணர்ந்தார்.

திருச்செந்தூர் பக்தர்கள் தக்க உபச்சாரத்துடன் கவனித்து வந்தார்கள். மெய்யை மெய்யாக உணர்ந்த சீடர்கள் உருவானார்கள். நல்ல அன்பர்களுக்கு தக்க உபதேசம் செய்து ஆன்மிக வழியில் நடத்தினார்.

இவ்விதமாக நாளாவட்டத்தில் திருச்செந்தூர், திருநெல்வேலி, மதுரை, தேனி, கம்பம், சுப்புலாபுரம் என்று பல பகுதிகளிலும் ஆன்ம நாட்டம் உடையவர்கள் தேனி ஸ்வாமிகளை தரிசித்து அவர்களின் ஆன்மிக அனுபவ உபதேசங்களை கேட்டுச் செல்வார்கள்.

தேனி ஸ்வாமிகளும் வாய்ப்பு கிடைக்கும் போதெல்லாம் பக்தர்களின் இல்லங்களுக்குச் சென்று ஆன்மிக வழிகாட்டி வருவார். 2-2-1998 அன்று இரவு 12 மணிக்கு தேனி ஸ்வாமிகள் தியானத்தில் உட்கார்ந்து இருந்த போது ஸ்ரீ அண்ணாமலை ஸ்வாமிகள் அவரை திருவண்ணாமலை வருமாறு கூப்பிட்டார். தேனி ஸ்வாமிகளோ திருவண்ணாமலையில் இருந்த ஸ்ரீ அண்ணாமலை ஸ்வாமிகளைப் பார்த்ததே கிடையாது. எனவே, திருச்செந்தூர் பக்தர்கள் பகவத்சிங், சேகர் இவர்களை உடன் அழைத்துக் கொண்டு திருவண்ணாமலை வந்து ஸ்ரீ அண்ணாமலை ஸ்வாமி ஆஸ்ரமம் தேடி வந்து சேர்ந்தார்.

இவ்விதம் திருவண்ணாமலை ஸ்ரீ அண்ணாமலை ஸ்வாமிகள் ஆஸ்ரமம், ஸ்ரீ சுந்தரம் ஸ்வாமிகள் தொடர்பு ஏற்பட்டது.

முதல் சந்திப்பிலேயே தேனி ஸ்வாமிகள் ஒரு அனுபவ ஞானி என்பதை ஸ்ரீ சுந்தரம் ஸ்வாமிகள் உணர்ந்தார். ஆகையால் அடிக்கடி ஸ்ரீ அண்ணாமலை ஸ்வாமி ஆஸ்ரமம் வந்து ஆத்ம சாதகர்களுக்கு உதவி புரியுமாறு வேண்டினார். அதன்பிறகு தேனி ஸ்வாமிகள் பலமுறை தொடர்ந்து வந்து ஸ்ரீ அண்ணாமலை ஸ்வாமி ஆஸ்ரமத்தில் தங்கி ஆத்ம சாதகர்களுக்கு ஆத்ம விசாரத்தை உபதேசம் செய்து வந்தார்.

ஓஷோவின் இரண்டாவது அவதாரம் பகவான் ஸ்ரீ சந்தோஷ் ஸ்வாமிகளும், தேனி ஸ்வாமிகளும் ஜுன் 2000-ல் ஸ்ரீ அண்ணாமலை ஸ்வாமிகள் ஆஸ்ரமத்தில் சந்தித்தனர். சந்தித்த உடனே பகவான் ஸ்ரீ சந்தோஷ் ஸ்வாமிகள், தேனி ஸ்வாமிகள் ஐந்தாம் பூமி பெற்ற ஆத்ம ஞானி என்பதை உணர்ந்து உடனே ஸ்ரீ சுந்தரம் ஸ்வாமிகளுக்கு உணர்த்தினார்.